**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12-ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.744/2023

பி.வா.சா.1 பேபிலட்சுமி க/பெ ராமகிருஷ்ணன்

<u>வாதிதரப்புகுறுக்குவிசாரணை தொடர்ச்சி:-</u>

1. தாவா வீடு தற்போது வாடகைக்காக விடப்பட்டுள்ளது. தாவா வீடு கீழ்தளத்தில் ரூ.4,000/-மும் மேல்தளத்தில் ரூ.2,000/-ம் வாடகைக்குவிடப்பட்டுள்ளது. தாவா வீடு கிரையம்பெற்ற பிறகு ஆல்ட்டிரேசன் எதுவும் செய்யப்பட்டதா என்றால் ஆல்ட்ரேசன் செய்யப்பட்டது. ஆல்ட்டிரேசன் செய்யப்பட்டது தார்ச்சுபில்டிங்காக மாற்றப்பட்டது. மேற்படி ஆல்ட்ரேசன் செய்யப்பட்டத்திற்கு எவ்வளவு செலவானது என்றால் ரூ.10, 00,000/- முதல் ரூ.15,00,000/- லட்சம் வரை செலவானது.

2. மாநகராட்சி அனுமதி பெற்று ஆல்ட்ரேசன் செய்யப்பட்டதா என்றால் அனுமதி பெற்றுதான் ஆல்ட்ரேசன் செய்யப்பட்டது. மாநகராட்சி அனுமதி பெறாமல் 24X33 கொண்ட விஸ்தீரணமான 792 சதுர அடி தார்ச்சு வீடு கட்டியுள்ளீர்கள் அது குறித்து பதில் அறிவிப்பு கொடுங்கள் என்று அறிவிப்புகள் 02.09.2016, 15.09.2016 ஆகிய தேதிகளில் அனுப்பபட்டுள்ளது என்றால் அறிவிப்பை நான் வாங்கவில்லை.

3. ரூ.36,00,000/- என் முதல் கணவருக்கு வந்த பணத்தை கொண்டுதான் மேற்கண்ட வீட்டை ஆல்ட்ரேசன் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வாதி இறந்து போன தந்தை அவருடைய பணத்தில்தான் தாவா வீடு வாங்கப்பட்டுள்ளது அதனால் வாதிக்கு பாதி பங்கு உரிமை உண்டு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:- இல்லை